# கும்பகோணம் மாநகராட்சி

## அவசரக்கூட்ட அழைப்பிதழ்

## கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற சாராரணக்கூட்டம் வருகின்ற 28.11.2025 **வெள்ளிக்கிழமை** காலை 10.15 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி பழைய அலுவலகத்தில் உள்ள படேல் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இடம் : கும்பகோணம்** | **மேயர்**
**நாள் : 24.11.2025** | **கும்பகோணம் மாநகராட்சி**

**இணைப்பு : பொருள்களில் நிரல்**
**பெறுநர் : அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**நகல் :**
1. பாராளுமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை
2. மாநிலங்களவை உறுப்பினர்
3. சட்டமன்ற உறுப்பினர், கும்பகோணம்
4. அனைத்து நாளிதழ்கள்

<table>
<tr><th>மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்<br>28.11.2025</th><th>அவசரக்கூட்ட தீர்மானம்<br>வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்</th><th>மாமன்ற தீர்மான எண்</th></tr>
<tr><td></td><td>

பொருள் எண்.1

கும்பகோணம் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9841458/- (ரூபாய் தொண்ணூற்றி எட்டு லட்சத்தி நாற்பத்தி ஒராயிரத்தி நானூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொலி காட்சி நாள் 05.11.2025 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் அரசாணை எண் (4ப) எண்.56 ன் படி அனுமதி பெற்று, 21.11.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>குறைவு /அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>M/s.S.A.Agencies, Kumbakonam.</td><td>9841457.59</td><td>9839192.58</td><td>மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.02 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>Uma Maheswari, Kumbakonam</td><td>9841457.59</td><td>10192533.75</td><td>மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 3.57 % அதிகம்</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட பணி மூன்று வருடத்திற்கு மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி ஒரு வருடத்திற்கு பணி மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு,
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.02% குறைவாக கொடுத்துள்ள M/s.S.A.Agencies, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு,
3. மேற்கண்ட பணியினை வருவாய் நிதி-2025-26 ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண்12325/2025/E2

</td><td>254<br>அலுவலக குறிப்பு ஏற்க்கப்பட்டது.</td></tr>
</table>

**மேயர்**
**கும்பகோணம் மாமன்றம்**

# கும்பகோணம் மாநகராட்சி

## சாராரணக்கூட்ட அழைப்பிதழ்

## கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற சாராரணக்கூட்டம் வருகின்ற 28.11.2025 **வெள்ளிக்கிழமை** காலை 10.15 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி பழைய அலுவலகத்தில் உள்ள படேல் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இடம் : கும்பகோணம்**
**நாள் :** 24.11.2025

**மேயர்**
**கும்பகோணம் மாநகராட்சி**

**இணைப்பு : பொருள்களில் நிரல்**
**பெறுநர் : அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**நகல் :**

1. **பாராளுமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை**
2. **மாநிலங்களவை உறுப்பினர்**
3. **சட்டமன்ற உறுப்பினர், கும்பகோணம்**
4. **அனைத்து நாளிதழ்கள்**

<table>
<tr>
<th><u>மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</u><br>28.11.2025</th>
<th><u>சாதாரணக்கூட்ட தீர்மானம்</u><br>வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்</th>
<th>மாமன்ற தீர்மான எண்</th>
</tr>
<tr>
<td></td>
<td>

**பொருள் எண்.1**

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான தாராசுரம் நேரு அண்ணா காய்கறி அங்காடியில் உள்ள கடைகளுக்கு கடந்த 01.07.2025, 08.07.2025, 13.08.2025 அன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. 15.07.2025 அன்று நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை, 135 **கடைகளுக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றன.22.07.2025 அன்று நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை, 14 **கடைகளுக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றன. கடந்த 05.08.2025 அன்று நடைபெற்ற மறுஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை, 04 **கடைகளுக்கு** ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றன. கடந்த 20.08.2025அன்று நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றன. 10.09.2025 நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றன.

தற்போது 30.09.2025 அன்று ஒன்பதாம் முறையாக நடைபெற்ற மறுஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்கண்டவாறு முதல் தள கடைகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | முதல் தளம் கடை எண் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. (ஓர் ஆண்டிற்கு) | குறிப்பு |
|---|---|---|---|---|
| | திரு.சி.வீரமணி, த/ப.சந்திரகாசன் 1/38 மேலத்தெரு வளையப்பேட்டை கும்பகோணம் | 03 (80 ச.அடி) | 48,100/- | கடந்த 01.07.2025, 08.07.2025, 15.07.2025, 22.07.2025, 05.08.2025, 13.08.2025, 20.08.2025 மற்றும் 10.09.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மறு ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிகளில் ஏலம் கோர எவரும் முன் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. தற்போது திரு.சி.வீரமணி , என்பவரின் ஒரு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.48.100 /- மட்டும் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையினை மாமன்றம் ஏற்கலாம். |

<u>அலுவலக குறிப்பு :</u> அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**அ7/1888/2021

</td>
<td>255<br>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>

**பொருள் எண்.2**

**கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள்/கடைகளில்,**

1. காந்தி பூங்கா முதல் தளக்கடை எண்.05
2. அறிஞர் அண்ணா பேருந்து நிலைய தரை தள கடை எண்.65
3. நகர பேருந்து நிலைய புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள இலவச கட்டண கழிப்பறைகள் கடை எண்.02 மற்றும் 03.
4. சாரங்கபாணி கீழ வீதியில் உள்ள கட்டண கழிவறை.
5. கும்பாரி குளம்.

</td>
<td>256<br>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
</table>

6. பொன்னியம்மன் குளம்.

7. யானையடிக்குட்டை ஆகியவற்றிற்கு கடந்த 07.10.2025 அன்று நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.

மேற்கண்ட இனங்களில் வ.எண்.04 ற்கு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் பற்றிய விபரங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| **இனம்** | **ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ஓர் ஆண்டிற்கு)** | **குறிப்பு** |
|---|---|---|---|
| சாரங்கபாணி கீழ வீதியில் உள்ள கட்டண கழிவறை | திரு. வி.ராம்குமார் த/பெ.வெங்கட்ராமன், 811, தெற்கு தெரு, நடுவக்கரை, உமா மகேஸ்வரபுரம்.<br><br>திரு. எஸ்.செந்தில்குமார், 5 வது தெரு, டாக்டர் முர்த்தி ரோடு, திருவள்ளுவர் நகர், கும்பகோணம். | ரூ.1,62,000/-<br><br>ரூ.1,60,001/- | இவ்வினத்திற்கு கடந்த 12.06.2025 24.07.2025, 14.08.2025 மற்றும் 21.08.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளிகளில்ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. தற்போது 7.10.2025 அன்று நடைபெற்ற மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளியில் 5வது முறை வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. வி.ராம்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,62,000/- ஆனது கூடுதலாக உள்ளது.<br>திரு.வி.ராம்குமார் என்பவர் அளித்துள்ள உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையினை மாமன்றம் ஏற்கலாம். |

<u>**அலுவலக குறிப்பு :**</u>

அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**அ7/1888/2021

---

**பொருள் எண்.3**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட இனங்களில் வணிக வளாக கட்டிடத்திற்கான முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளிகள் தஞ்சாவூர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் கடந்த 18.09.2024 விளம்பரம் செய்யப்பட்டதற்கு, விளம்பரக் கட்டணம் ரூ.23.890/- ஐ தினத்தந்தி நாளிதழுக்கு வழங்கப்பட்டதற்கான பின்னேற்பு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

தினத்தந்தி நாளிதழுக்கு தொகைரூ.23.890/-ஐ வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1888/2021/அ7

**257**
அனுமதி வழங்கப்பட்டது.

---

பொருள் எண்.4

கும்பகோணம் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு டெங்கு கொசு கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள (களப்பணி மேற்கொள்ள) பொது சுகாதாரத் துறை மூலமாக வழிகாட்டு நெறிமுறைகளின் படி 153 - பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண்.669 நாள். 31.07.2023 நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண். 962 நாள்.

**258**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

22.01.2024 அனுமதி பெறப்பட்டு குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸர்ஸ்.ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார்க்கு மூன்று மாத காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கள பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் இப்பணியினை மேற்கொண்டு வரும் மெஸர்ஸ்.ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தார் மூலம் அதே விலை விகிதத்தில் நவம்பர், டிசம்பர், மற்றும் ஜனவரி-2026 ஆகிய மாதங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கும் பொருட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** (அ) அனுமதி அளிக்கலாம்.
(ஆ)செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 5869/ 2023 / எச்.1**

**பொருள் எண்.5**

கும்பகோணம் மாநகராட்சி வார்டுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் "உங்களுடன் ஸ்டாலின்" எனும் முகாமானது நடைபெறுவதால் (மண்டலம் -4 ) (Phase -4) தேவையான அடிப்படை வசதிகள் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) 14.10.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.ஏபி பில்டர்ஸ் | 490785.60 | 490736.52 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.01 % குறைவு |
| 2 | மெசர்ஸ்.மித்தேஷ் கன்ஸ்ட்ரக்ஸன் | 490785.60 | 493239.53 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.50 % அதிகம் |

**அலுவலக குறிப்பு.**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.01% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ்.ஏபி பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், கும்பகோணம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான வேலை உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கு.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதி (2025-26)-ன் கீழ் செலவிடவும்,மாமன்றத்தின் அனுமதிக்கு

ந.க.எண்6548-4(Phase-4)/2025/E2

**259**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக் கப்பட்டது.

பொருள் எண்.6

கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-4,வார்டு எண் 24-ல் உல்லிக்கான தெருவில் ஆண்கள் கழிவறையை பழுதடைந்த நிலையில் உள்ளது. இக்கட்டிடம் மக்கள் பயன்படுத்த முடியாத பழுதடைந்த கட்டிடமாக உள்ளதால், இக்கட்டிடத்தை இடிப்பதற்கு அரசானை எண் 174 ,தேதிய 14.12.2022 ல் குறிப்பிட்டுள்ள விதிகளின் படி இடிப்பதற்கும், மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**260**
அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 10980-3 /2025/இ2** | |
| | பொருள் எண்.7<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை 2025–2026 மாநில கோரிக்கை எண் 34 –ல் கும்பகோணம் மாநகராட்சிப் பகுதிகளுக்கு புதிதாக பேருந்து நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு கலந்தாலோசகர் நியமிக்க மதிப்பீடு தயார் செய்யும் பணிக்கு மாநகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்ததாரரிடமிருந்து 08.10.2025 அன்று பணியின் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி நாள் 22.09.2025 அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்ட அட்டவணையின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டைவிட (–) 1.35 % குறைவாக கொடுத்தM/s. Capital Engineering Consultancy Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்ற வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 09. 10 .2025 அன்று முன் அனுமதிபெற்று வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **261**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை %. | ஒப்பந்தப்புள்ளி தொகை | அதிகம் /குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s. Capital Engineering Consultancy Pvt Ltd, Chennai | திட்டமதிப்பீட்டுத்தொகையில் 1.50 % | திட்டமதிப்பீட்டுத் தொகையில் 1.48 % | (–) 1.35 % குறைவு |
| 2 | M/s. Ad–win Engineering Consultancy Chennai | திட்டமதிப்பீட்டுத்தொகையில் 1.50% | திட்டமதிப்பீட்டுத் தொகையில் 1.60 % | (+) 6.67 % அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை பொதுநிதி 2025–2026ன் கீழ் செலவு செய்யலாம். திட்ட நிதியில் தொகை பெறப்பட்டால் பொது நிதியினை திட்ட நிதியில் ஈடு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட (–) 1.35 % குறைவாக கொடுத்த M/s. Capital Engineering Consultancy Pvt Ltd, Chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்ற வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 4570 /2025/இ2**

| | | |
|---|---|---|
| | பொருள் எண்.8<br>கும்பகோணம் மாநகராட்சி வார்டுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உங்களுடன் ஸ்டாலின் எனும் முகாமானாது நடைபெறுவதால் மண்டலம் –3 (phase –2) தேவையான அடிப்படை வசதிகள் செய்யும் பணிக்கு ரூ. 5.00இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும் ) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 10.09.2025 அன்று பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 08.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியின் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 08.10.2025 அன்று முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **262**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர். அசோக்குமார் | 4,87,717.60 | 4,86,268.56 | மதிப்பீட்டை விட (–) 0.30% குறைவு |
| 2 | மெசர்ஸ். மித்தேஷ் கன்ஸ்ட்ரக்சன் | 4,87,717.60 | 4,89,440.40 | மதிப்பீட்டைவிட (+) 0.35% அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை வருவாய் நிதி 2025–2026 கீழ் செலவு செய்யலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (– ) 0.30% குறைவாக கொடுத்துள்ள திரு.ஆர்.அசோக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை பார்வைக்கும் பதிவிற்கும்.

**ந.க.எண். 37179 /2025/இ2**

**பொருள் எண்.9**

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச் சத்து குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடநிற்றலைத் தவிர்க்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் இம்மாநகராட்சி 9 தொடக்கப்பள்ளிகள் மற்றும் 4 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு முதற்கட்டமாக அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை வேளைகளில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என அரசாணை நிலை எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (சந–4) துறை நாள. 27.07.2022–ல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாமன்ற தீர்மான எண்.790 நாள்.29.09.2023–ன்படி ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு, கும்பகோணம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின்படி இம்மாநகராட்சி 11 தொடக்கப்பள்ளிகள், 7 மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 4 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 1171 மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.10/– வீதத்தில் உணவு சமைத்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் சுவாமிமலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் 159 மாணவ மாணவியருக்கும் சேர்த்து மொத்தம் 1256 மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வந்தது. மேலும், மூன்றாம் கட்டமாக அரசு உதவி பெறும் 22 பள்ளிகளில் பயிலும் 2778 மாணவ மாணவியர்களுக்கு 26.08.2025 முதல் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டும் வருகிறது. ஆக மொத்தம் 44 பள்ளிகளில் பயிலும் 4034 மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில் மேற்கண்ட பள்ளிகளில் புதிதாக சேர்க்கை செய்யப்படும் பள்ளி மாணாக்கர்களுக்கும் காலை உணவு வழங்கவும் அனுமதிக்கலாம்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 17404/2022/எம்.1 நாள் 20.09.2025ம் தேதிய கடிதத்தில் காலை உணவு தயாரித்து வழங்கும் நிறுவனங்களுக்கான ஒப்பந்தக் காலம் கும்பகோணம் நகராட்சிக்கு 28.09.2025 அன்றுடன் முடிவடைவதாகவும், ஒப்பந்தகாலம் முடிவடையும் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு புதிய ஒப்பந்ததாரரால் (Service Provider) முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு தயாரித்து வழங்க அரசால் வெளியிடப்பட்ட நிலையான வழிகாட்டு

**263**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | நடைமுறைகளை பின்பற்றியும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகள் 2000ன் படியும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 3 மாதங்களுக்கு மிகாமல் கால நீட்டிப்பு செய்துகொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் காலை சிற்றுண்டி சமைத்து வழங்கும் பணியினை 30.09.2025 முதல் ஒருமாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ள மாமன்ற தீர்மான எண் 243 நாள் 30.09.2025ல் அனுமதி அளித்துள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 20.09.2025ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் தற்போது காலை உணவு தயாரித்து வழங்கும் பணியினை (Service Provider) 01.10.2025 முதல் 30.11.2025 வரை இரண்டு மாத காலத்திறகு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், இப்பணியினை மேற்கொண்டு வரும் ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு, கும்பகோணம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதப்படி தொகை வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு:<br>1. பணியின் அவசர அவசியம் ஏற்கனவே வழங்கப்பட்ட நாள் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.10/– வீதத்தில் உணவு சமைத்து வழங்கவும், வாகனத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.2.70 வீதமும் ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு, கும்பகோணம் அவர்களின் மூலம் சமைத்து வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 01.10.2025 முதல் 30.11.2025 வரை இரண்டு மாத காலத்திறகு கால நீட்டிப்பு செய்துகொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கு காலை உணவு தயாரித்து வழங்கும் பணிக்கான ஒப்பந்ததாரரை (Service Provider) 3 வருட காலத்திற்கு அமர்த்திக் கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க. எண் 4600 /2022/சி3** | |
| | **பொருள் எண்.10**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 27968/2022/பி1, நாள் 15.11.2022 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வேலை உத்தரவு ந.க.எண்.2248/2023/இ1, நாள் 03.01.2024 தேதிய கடிதத்தில், இம்மண்டலத்திற்குட்பட்ட பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், வேதாரண்யம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, மணப்பாறை, முசிறி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய நகராட்சிகள், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ஆகிய மாநகராட்சிகளிலும் கலைஞர் நகர்புற மேம்பாடு மற்றும் இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அறிவுசார் மையங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் Care Taker பணியிடத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க. எண்.2248/2022/இ1, நாள் 28.12.2024 தேதிய கடிதத்தில் இம்மண்டலத்திற்குட்பட்ட 11 நகராட்சிகள், 3 மாநகராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிகளில் உள்ள அறிவுசார் மையத்தில் Care Taker பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் நியமிப்பது தொடர்பாக M/s. Fusion Man Power and Infra Services நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையில் (Bid document) ஒப்பந்த காலம் நான்கு ஆண்டுகள் எனவும், | **264**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்ப ட்டது. |

| | | |
|---|---|---|
| | தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனத்தின் செயல் திறன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டு காலம் கால நீட்டிப்பு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட M/s. Fusion Man Power and Infra Services செயல் திறன் அடிப்படையில் பணி உத்தரவு 03.01.2025 முதல் 02.01.2026 வரை ஓராண்டு காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்படுகிறது.<br>எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதங்களின் அடிப்படையில் கும்பகோணம் மாநகராட்சி, மண்டலம் 2, காந்தியடிகள் சாலையில் உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் 02.06.2025 முதல் பணிபுரிந்து வரும் 1 எண்ணிக்கை நூலகருக்கான ஜூன் 2025 முதல் ஆகஸ்ட் 2025 வரையில் பணிபுரிந்தமைக்கான மாத ஊதியத்தினை M/s. Fusion Man Power and Infra Services நிறுவனத்திற்கு வழங்கியதையும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் மேற்படி பணியினை 02.01.2026 வரை கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><br>அலுவலக குறிப்பு: 1. மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி காலநீட்டிப்பு காலத்திற்கான பணியாளர் ஊதியத்தினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண் 7097 /2025/இ1 | |
| | பொருள் எண்.11<br>கும்பகோணம் மாநகராட்சியில் பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதாரப் பிரிவுகளில் தற்போது பல்வேறு திட்டப் பணிகள், திட்ட அறிக்கைகள் தயார் செய்யவும், திட்டப் பணிகளுக்காக விரிவான திட்ட மதிப்பீடுகள் மற்றும் பிரேரணைகள் அரசு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் உட்பட பல்வேறு உயர் அலுவலர்களால் கோரப்படும் விபரங்கள், அறிக்கைகள் தயார் செய்ய போதிய தட்டச்சர்கள் இல்லாமையால் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) முறையில் மூன்று தட்டச்சர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.15720/2022/ஜி2 நாள் 10.10.2022ன்படி தினக்கூலி அடிப்படையில் அமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி ஒப்பந்தகாலம் 31.03.2025ம் தேதியுடன் அனுமதி முடிவுற்ற நிலையில் ஏற்கனவே தொழில்நுட்ப உதவியாளர்கள் வழங்கும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலைவிகிதத்தில் மேலும் 01.04.2025 முதல் மூன்று மாதம் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்படும் வரை எது முன்னரோ அதுவரை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 420 நாள் 28.03.2025ல் அனுமதி அளித்துள்ளது. இந்நிலையில் ஜூலை 2025 மற்றும் ஆகஸ்ட் 2025 மாதங்களில் பணிபுரிந்தமைக்கான ஊதியம் வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பும், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை கருத்திற்குகொண்டு செப்டம்பர் 2025 அக்டோபர் மற்றும் நவம்பர் 2025 வரையிலான மூன்று மாதங்களுக்கு தற்போதுள்ள ஒப்பந்ததாரர் மூலம் தற்போதுள்ள மூன்று தட்டச்சர்களை தினக்கூலி ஊதிய விகிதத்திலேயே பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்துகொள்ள அனுமதியும், 01.12.2025 முதல் 2025–2026ம் ஆண்டு மாவட்ட ஆட்சியரக அனைத்து அரசுத் துறை அலுவலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் மூன்று தட்டச்சர்களை தினக்கூலிப் பணியாளர்கள் தினக்கூலி விலை விகிதப்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. பணியின் அவசியம் கருதி ஜூலை மற்றும் ஆகஸ்ட் 2025 மாதங்களுக்கு ஊதியம் வழங்கிமையக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.. | **265**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்ப ட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2. செப்டம்பர் 2025, அக்டோபர் 2025 மற்றும் நவம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கு மூன்று தட்டச்சர்களுக்கு காலநீட்டிப்பு செய்துகொள்ள அனுமதிக்கலாம்.<br>3. மூன்று தட்டச்சர்களை 01.12.2025 முதல் 2025–2026ம் ஆண்டு மாவட்ட ஆட்சியரக அனைத்து அரசுத் துறை அலுவலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களுக்கான தினக்கூலி விலை விகிதப்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்ததாரர் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.<br>4. மேற்படிபணிக்கான செலவினத்தினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க. எண்:10172/2025/இ2** | | |
| | பொருள் எண்.12<br>கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட பாதாளசாக்கடை கழிவுநீரை அகற்றுவதற்கு இயந்திரகுழியிலிருந்து மற்றொரு இயந்திரகுழிகளுக்கு கொண்டு செல்லும் பணிக்கு 2 HP Non clog Submersible motor – 10 எண்ணிக்கை குழாய்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ. 5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும் ) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 04.10.2025 அன்று பெற்று பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 22.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியின் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 22.10.2025 அன்று முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ,</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,</th><th>குறைவு / அதிகம்</th></tr><tr><td>1</td><td>மெசர்ஸ். இன்பிரான் பிரைவேட் லிமிடெட்</td><td>4,83,237.73</td><td>4,82,761.60</td><td>மதிப்பீட்டை விட (–) 0.10% குறைவு</td></tr><tr><td>2</td><td>மெசர்ஸ்.செல்வா கன்ஸ்ட்ரக்சன்</td><td>4,83,237.73</td><td>4,93,434.66</td><td>மதிப்பீட்டை விட (+) 2.11% அதிகம்</td></tr></table><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025–2026 கீழ் செலவு செய்யலாம்.<br>2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.10% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ். இன்பிரான் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>**ந.க எண். 11126 /2025/இ2** | **266**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது. | |
| | பொருள் எண்.13<br>கும்பகோணம் மாநகராட்சி உட்பட்ட உச்சிபிள்ளையார் கோவில் முதல் செல்வம் தியேட்டர் வரை உள்ள (தஞ்சாவூர் மெயின் ரோடு) பழுதடைந்த | | |

மின்புதைவடக்கம்பிக்கு பதிலாக Overhead Service Line ஆக மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.75000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 23.09.2025 ல் நிர்வாக அனுமதி பெற்று, 14.10.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.செல்வா கன்ஸ்ட்ரக்ஸன், கும்பகோணம் | 71118.36 | 71111.25 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.01 % குறைவு |
| 2 | திரு.டி.சபரீசன் சீர்காழி. | 71118.36 | 71122.62 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.02 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட – 0.01% குறைவாக கொடுத்துள்ள மெசர்ஸ்.செல்வா கன்ஸ்ட்ரக்ஸன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு,
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதி –2025–26–ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

ந.க.எண்/012223 /2025/E2

**267**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

---

பொருள் எண்.14

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்– 1 வார்டு எண்–16ல் உள்ள பெரியக்கடைத் தெரு அமைந்துள்ள பொதுக்கழிப்பிடத்தில் கழிவுநீர் தொட்டி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.60 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதி 2025–26–ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** 012224 /2025/E4

**268**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண்.15**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்– 1 க்குட்பட்ட வார்டு எண்–14 பேட்டை தெருவில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி(water tank) உள்ளது அதில் உள்ள தூண்கள் மிகவும் பழுதடைந்துள்ளது அதனை சரிசெய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.10 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்( மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் (2025–26) மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.012225** /2025/E4

**269**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

---

பொருள் எண்.16

இம்மாநகராட்சி பொதுச்சுகாதாரம் கொசு தடுப்பு பிரிவு மூலம் மாநகரப் பகுதிகளில் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி பணிகளான தெருச்சாக்கடைகள் சுத்தம் செய்து கொசுப் புழுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணிகள், முதிர் கொசு ஒழிக்கும் பணிக்கு புகை மருந்து அடிக்கும் பணிகள், மழை நீர் தேங்கி இருக்கும் இடங்களில் ஆயில் பால் போடும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளுக்கு தேவையான மருந்துகள் 2025-2026ம் ஆண்டிற்கு வாங்க வேண்டி உள்ளது. மேற்கண்ட மருந்து பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மற்றும் TNMSC அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ)அனுமதி அளிக்கலாம்.

ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 011600/ 2025 / எச்.1**

**270** அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

---

பொருள் எண்.17

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு கீழ் இயங்கும் TN68 F1698 (TIPPER) – வாகனத்தின் பழுதுகளை சரி செய்து தகுதி சான்று பெறும் பணியை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2,60,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 9576/ 2025 / எச்.1**

**271** அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண்.18**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 1-க்குட்பட்ட வார்டு எண் 5ல் உள்ள பெருமாண்டி நவீன எரியூட்டும் தகன மேடையில் உள்ள பழுதடைந்த இயந்திரங்களை பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.18.00 இலட்சத்திற்கு (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதி 2025-2026ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்

**ந.க. எண் 12403 /2025/இ2**

**272** அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது..

---

**பொருள் எண்.19**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் 11919/2022/இஏ-2, நாள் 28.08.2025ம் தேதிய கடிதத்தில் இம்மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளால் சேதமடைந்த சாலைகளை புதுப்பிக்கும் பணியினை 1.175 கி.மீ. நீளத்திற்கு ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் 15வது மத்திய நிதிக்குழு Untied Grant நிதியின் கீழ் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி அளித்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணிகளின் விவரம் | சாலையின் அளவு (கி.மீ.) | தொகை | 15th CFC Untied Grant (2021-2022) | 15th CFC Untied Grant Untied Grant (2022-2023) | 15th CFC Untied Grant Untied Grant (2025-2026) |
|---|---|---|---|---|---|---|
| 1 | Providing BT Surface to Solaiyappan Street in 105013R150, 9th Street- | 0.583 | 47.00 | 0.50 | 0.94 | 45.56 |

**273** அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 105013R159 | | | | | |
| 2 | Providing BT surface to Krishnan Street– 105013R152, Kumbeswaran Thirumanjana veethi– 105013R153, Cauvery Karai Street– 105013R156 | 0.590 | 45.00 | – | – | 45.00 |

அதனடிப்படையில் பட்டியலில் கண்ட பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 24.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒவ்வொரு சிப்பத்திற்கும் தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர்/சிப்பம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின் படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீத விபரம் ரூ. | வேலை உத்தரவு பெறும் ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 15வது மத்திய நிதிக் குழு மானியம் (Untied grant) | சோலையப்பன் தெரு, 105013R150, 9வது தெரு 105013R159 ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி (சிப்பம்-1) | திரு. ஆர். அசோக்குமார் | 46,46,884.26 | 46,46,421.13 | மதிப்பீட்டை விட (–) 0.01% குறைவு (GST 18% உட்பட) | மதிப்பீட்டை விட (–) 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர்.அசோக்குமார், 239 அன்னை அஞ்சுகம் நகர், கும்பகோணம் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம். |
| | | | M/s. மித்தேஸ் கன்ஸ்ட்ரக்ஷன், கும்பகோணம். | | 48,78,779.77 | மதிப்பீட்டை விட (+) 5.00% அதிகம் (GST 18% உட்பட) | |
| 2 | 15வது மத்திய நிதிக் குழு மானியம் (Untied | கிருஷ்ணன் தெரு– 105013R152, கும்பேஸ்வரன் திருமஞ்சன வீதி– 105013R1 | M/s. மித்தேஸ் கன்ஸ்ட்ரக்ஷன், கும்பகோணம். | 44,26,291.76 | 44,23,436.50 | மதிப்பீட்டை விட (–) 0.06% குறைவு (GST 18% உட்பட) | மதிப்பீட்டை விட (–) 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. மித்தேஸ் கன்ஸ்ட்ரக் |
| | d | | M/s. | | 44,29,714. | மதிப்பீட் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | grant) | 53, காவேரி கரைத் தெரு– 105013R156 ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைக்கும் பணி (சிப்பம்–2) | ஏ.பி., பில்டர்ஸ் கும்பகோணம். | | 40 | டை விட (+) 0.07% அதிகம் (GST 18% உட்பட) | ஷன், கும்பகோணம். அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம். |

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. கலம் 8ல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந.க. எண் 5667 / 2025 / E2**

**பொருள் எண்.20**

கும்பகோணம் மாநகராட்சி வார்டுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உங்களுடன் ஸ்டாலின்" எனும் முகாமானது நடைபெறுவதால் (மண்டலம் –1 ) (Phase –II) தேவையான அடிப்படை வசதிகள் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 20.08.2025 ல் நிர்வாக அனுமதி பெற்று 29.08.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும்,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு அதிகம்/ |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.அசோக்குமார் கும்பகோணம் . | 48,7717.60 | 4,87,619.66 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.02% குறைவு |
| 2 | மெசர்ஸ் மித்தேஸ் கன்ஸ்ட்ரக்ஸன். | 48,7717.60 | 4,99,861.59 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 2.49 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட – 0.02% குறைவாக கொடுத்துள்ள திரு. ஆர்.அசோக்குமார், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கியமையை மாமன்றத்தின் பார்வைக்கு.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதி –2025–26 ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

**274**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக் கப்பட்டது.

ந.க.எண்2404 /2025/E2

**பொருள் எண்.21**

கும்பகோணம் மாநகராட்சி உட்பட்ட வார்டு எண் 43 ல் உள்ள அழகப்பன் தெருவில் (M.C.S.R சுகாதார சந்து) கழிவுநீர் இயந்திரக் குழிகள் மற்றும் அதற்குண்டான கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.560000/- (ரூபாய் ஐந்து லட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) மாமன்ற தீர்மான எண்27, நாள் 30.04.2025 ல் நிர்வாக அனுமதி பெற்று, 04.11.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி .சகுந்தலா கும்பகோணம் | 551235.76 | 551014.83 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.04 % குறைவு |
| 2 | மெசர்ஸ்.செல்வா கன்ஸ்ட்ரகஸன், கும்பகோணம் | 551235.76 | 553257.75 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.37 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.04% குறைவாக கொடுத்துள்ள திருமதி .சகுந்தலா, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு,
2. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதி -2025-26 ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு

**275**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக் கப்பட்டது.

ந.க.எண்.868 /2025/E2

**பொருள் எண்.22**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் -3 ல் வார்டு எண் 34 க்குட்பட்ட செந்தமிழ் நகரில் நெடுஞ்சாலைதுறைக்கு சொந்தமாக உள்ள சேதமடைந்த பாலத்தை அகற்றி புதிய அகலமான பாலம் கட்டுவதற்கு நெடுஞ்சாலைத்துறைக்கு கடிதம் அனுப்பி அரசின் நிதி பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்கண்ட பணிக்கு நிதி பெற்று பணி மேற்கொள்ள நெடுஞ்சாலைத்துறைக்கு கடிதம் அனுப்புவதற்கு அனுமதி வழங்கலாம்.

**276**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

ந.க.எண்.10943 /2025/E2

**பொருள் எண்.23**

கும்பகோணம் மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மாநகராட்சி உரக்கிடங்கில் சேகரம் செய்யப்பட்டுள்ள NON-SALABLE பிளாஸ்டிக் மற்றும் இதர மக்காத குப்பைகளை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது. மாதந்தோறும் சுமார் 60 நடைகள் லாரி மூலம் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் NON-SALABLE கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப வேண்டியது அவசர அவசியமாக உள்ளது. மேற்கண்ட

**277**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பணியினை தொடர்ச்சியாக மேற்கொண்டால் மட்டுமே மக்காத குப்பைகளை சேகரம் செய்ய இடம் இருக்கும் என்பதால் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை அப்புறப்படுத்த 60 நடைகள் லாரி மூலம் இயக்குவதற்கும் அதற்குண்டான உத்தேச செலவீனம் ரூ.09.50/- இலட்சத்திற்கும் (ரூபாய் ஒன்பது இலட்சம் ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
(அ) அனுமதி அளிக்கலாம்.
(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.12734/2025/எச்-1

**பொருள் எண்.24**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண் 1ல் கொட்டையூரில் உள்ள திரௌபதி அம்மன் கோயில் குளம் சீரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.51.00/- (ரூபாய் ஐம்பத்தொரு இலட்சம் மட்டும்) மதிப்புமிக்க ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள் 23.04.2025 -ல் நிர்வாக அனுமதி பெற்று 02.06.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறைவு /அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எபி. பில்டர்ஸ் கும்பகோணம் | 49,76,403 | 49,67,939.11 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.17 % குறைவு |
| 2 | மெசர்ஸ் மித்தேஸ் கன்ஸ்ட்ரக்ஸன். | 49,76,403 | 49,76,273.90 | மதிப்பீட்டின் விலை விகிதத்தில் 0.0026 % அதிகம் |

**278**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக் கப்பட்டது.

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.17% குறைவாக கொடுத்துள்ள எபி.பில்டர்ஸ், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கியமையை மாமன்றத்தின் பார்வைக்கு.
2. மேற்கண்ட பணியினை KNMT திட்டம்-2025-26-ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கு.

ந.க.எண்: 2244 /2025/E2

**பொருள் எண்.25**

இம்மாநகராட்சி பொறியியல் பிரிவு வாகனங்கள் பராமரிப்பு செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 56.நாள்30.06.2025. நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து பொறியியல் பிரிவு பராமரிப்பு வாகனம் TN49 AX 2923 வாகனத்தின் டயர் பழுந்தடைந்துள்ளது. மேற்படி வாகனத்திற்கு டயர் வாங்கி பொருத்திட விலைப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**279**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக் கப்பட்டது.

.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அக்ரோ சர்விஸ் சென்டர் 1A/12 3- புறவழிச்சாலை, விஜயபுரம், திருவாரூர் | 48,852 |
| 2. | அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கோ ரோடு, திருவாரூர். | 37,524 |
| 3. | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், அஞ்சு தலைப்பு வாய்க்கால், மயிலாடுதுறை மெயின் ரோடு, கும்பகோணம் | 36,816 |

**அலுவலக குறிப்பு:-** அ) குறைந்த விலைவிகித விலைப்புள்ளி கொடுத்துள்ள சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ் தனலெட்சுமி நகர்,அஞ்சு தலைப்பு வாய்க்கால், மயிலாடுதுறை மெயின் ரோடு, கும்பகோணம்.

ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 8241 /2025/ இ3-மையம்

**பொருள் எண்.26**

கும்பகோணம் மாநகராட்சி 15th CFC 2025-26 திட்டச்சாலை பணிகள் நடைபெற்று வருகின்றது. இதில் சிப்பம் -2ன் படி தார் சாலைகள் ரூ.45.00 இலட்சத்திற்கு வார்டு எண் 13 கிருஷ்ணன் தெரு, கும்பேஸ்வரன் திருமஞ்சன வீதி, காவேரி கரை தெரு, ஆகிய சாலைகள் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதிபெற்று பணி ஆணை ஒப்பந்ததாரர் மெசர்ஸ் மித்தேஸ் கன்ஸ்ரக்சன் நிறுவனத்தினரால் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு அதற்கு வழங்கப்பட வேண்டிய பட்டியல் தொகை போக உள்ள மீதத்தொகையில் குடிநீர்க்குழாய் பதித்தல் பணி மற்றும் பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணிகளால் சேதமடைந்த சாலைகளை மதிப்பிற்குரிய மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணைமேயர் அவர்களின் அறிவுரைப்படியும், பொதுமக்களின் நலன் கருதியும் வார்டு எண் 13ல் சோலையப்பன் தெரு வார்டு எண் 12ல் சக்கரபாணி வடக்கு வடம்போக்கிதெரு மற்றும் வார்டு எண் 11ல் சக்கரபாணி கிழக்குதெரு ஆகிய சாலைகளை புதுப்பிக்கும் பணியினை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**280**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

<u>அலுவலககுறிப்பு</u>

சோலையப்பன் தெரு வார்டு எண் 13, மற்றும் சக்கரபாணி வடக்கு வடம்போக்கிதெரு வார்டு எண்12, மற்றும் சக்கரபாணி கிழக்கு தெரு, வார்டு எண் 11 தார் சாலையையும் சீரமைத்திட பொதுமக்களின் நலன் கருதி தார் சாலை மாற்றி அமைத்ததற்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெறவும், பணி முடித்தமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண் 9419/2025/E2

**பொருள் எண்.27**

கும்பகோணம் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 2025-2026 சட்ட மன்ற அறிவிப்பில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் மானிய கோரிக்கை எண் 34ல் "கும்பகோணம் மாநகராட்சி, அம்பாசமுத்திரம், ஆம்பூர், கள்ளக் குறிச்சி, சாத்தூர், செங்கல்பட்டு, திருக்கோவிலூர், திருச்செந்தூர் ஆகிய

**281**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்ப

| | | |
|---|---|---|
| | நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்களும், ஈரோடு மாநகராட்சி, ஆற்காடு, இராணிப்பேட்டை நகராட்சிகளின் பேருந்து நிலையங்களில் கூடுதல் பணிகளும் ரூ.142.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது<br><br>தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சியானது 2021ஆம் ஆண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. கும்பகோணம் மாநகரில் புகழ்பெற்ற சைவ, வைணவ கோவில்கள் அமைந்துள்ளதாலும், உலகப்புகழ் பெற்ற கும்பமேளாவிற்கு இணையான மகாமக திருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்பட்டு வருகிறது. 2016ம் ஆண்டு மகாமக திருவிழாவின்போது சுமார் 60 இலட்சம் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். எதிர் வருகின்ற 2028–ல் நடைபெற உள்ள மகாமக திருவிழாவிற்கு சுமார் 2 கோடி பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நவக்கிரக கோவில்கள் தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோவில், திருநாகேஸ்வரம் ராகு ஸ்தலம், உப்பிலியப்பன் கோவில், பட்டீஸ்வரம் துர்க்கையம்மன் கோவில், அறுபடை வீடுகளில் நான்காம் படைவீடுகளில் ஒன்றான சுவாமிமலை முருகன் கோவில் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த கோயில்கள் கும்பகோணம் மாநகரைச் சுற்றி அமைந்துள்ளதால் பிற மாவட்டங்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கும்பகோணம் மாநகரில் தங்கி கோவில்களுக்கு சென்று வருகின்றனர்.<br><br>தற்போது கும்பகோணம் மாநகராட்சி பகுதியினைச் சுற்றி ஏராளமான விவசாய வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்யும் மண்டலமாகவும், தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள பகுதியாகவும் விளங்குகிறது. மேலும், தற்போது கும்பகோணம் மாநகராட்சியில் உள்ள பேருந்து நிலையம் இட நெருக்கடியால் போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கு போதிய இட வசதி இல்லாததால், மிகவும் நெரிசலாகவும், மேலும், வாகனங்கள் சென்று வரும் சாலை குறுகலான பகுதியாக இருப்பதாலும் வணிக வளாகங்கள் நிரம்பிய மிக நெரிசலான பகுதியாகவும் உள்ளது. மேலும், வாகன போக்குவரத்து நெரிசல்களால் மிக காலதாமதம் ஏற்படுவதால், பொதுமக்கள், பயணிகள், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, தற்போது பேருந்து நிலையத்திற்கு மாற்றாக கூடுதலாக புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து முக்கிய பிரமுகர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் ஊடகங்கள் மூலம் தொடர்ச்சியாக கோரி வருகின்றனர்.<br><br>எனவே, கும்பகோணம் மாநகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட மாநகரின் மையப் பகுதியிலோ, நகரின் மாநில நெடுஞ்சாலையினை ஒட்டியோ போதுமான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதுமில்லாத நிலையில் மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் சாக்கோட்டை திரு.க.அன்பழகன் அவர்கள், தனக்கு சொந்தமான நிலம் கும்பகோணம் வட்டம், சாக்கோட்டை கருப்பூர் கிராம புல எண்கள் 124/1, 118/1, 122, 123, 117/1, 117/2, 119/1Bல் அமைந்துள்ள 10.58 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கியுள்ளதை ஏற்கவும், அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு, மாண்புமிகு கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில், stake holder கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு கூட்டத்தில் கலந்துகொண்டோர்களிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டு அதனடிப்படையில், கலந்தாலோசகர்களால் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு, TUFIDCO நிதி நிறுவனம் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கூடுதலாக 2.24 ஏக்கர் நிலம் தேவைப்பட்டதன் அடிப்படையில் ஸ்ரீகாந்தன் எண்டர்பிரஸஸ் (Sri Kaanthan Enterprises). கோயம்புத்தூர் நிறுவனத்தார் 119/2B2 0.80 ஏக்கர்) 122 (0.74 ஏக்கர்) மற்றும் | ட்டது. |

124/2 (0.70 ஏக்கர்) ஆகிய புல எண்களில் அடங்கிய 2.24 ஏக்கர் மொத்த பரப்பளவு கொண்ட நிலத்தை கும்பகோணம் மாநகராட்சிக்கு தானமாக வழங்குவதை ஏற்கவும், இதன் தொடர்ச்சியாக 26th Common Project Sanctioning and Monitoring Committee–ல் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு அரசாணை (எம்.எஸ்.) எண் 373 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்ஏ.) துறை நாள் 05.11.2025–ல் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளது என்பதனை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

(Rs. In Crore)

| Sl. No. | Name of the Project | Approved project Cost by CPSMS | ULB Share | NHB UIDF share |
|---|---|---|---|---|
| 1 | Construction class A Bus stand at Karupur (newly added village), Sakkottai–Kumbakonam City Municipal Corporation | 42.90 | 6.44 | 36.46 |

அலுவலக குறிப்பு:

1. கும்பகோணம் வட்டம், சாக்கோட்டை கருப்பூர் கிராம புல எண்கள் 124/1, 118/1, 122, 123, 117/1, 117/2, 119/1B–ல் அமைந்துள்ள 10.58 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கியுள்ளதை ஏற்கலாம்.
2. கூடுதலாக தேவைப்படும் 2.24 ஏக்கர் நிலம் தேவைப்பட்டதன் அடிப்படையில் ஸ்ரீகாந்தன் எண்டர்பிரஸஸ் (Sri Kaanthan Enterprises). கோயம்புத்தூர் நிறுவனத்தார் 119/2B2 0.80 ஏக்கர்) 122 (0.74 ஏக்கர்) மற்றும் 124/2 (0.70 ஏக்கர்) ஆகிய புல எண்களில் அடங்கிய 2.24 ஏக்கர் மொத்த பரப்பளவு கொண்ட நிலத்தை கும்பகோணம் மாநகராட்சிக்கு தானமாக வழங்குவதையும் ஏற்கலாம்.
3. அரசு வழங்கியுள்ள நிர்வாக அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**ந.க. எண் 4570/ 2025 / E2**

**பொருள் எண்.28**

கும்பகோணம் மாநகராட்சி வார்டு எண் 20 அய்யப்பன் நகரில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதியின் அருகில் செல்லும் மழை நீர் வடிகால் கட்டும் பணியினை ரூ.8.25 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளுவதற்கு மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 22.02.2025ல் அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் 19.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர்பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படிதொகை ரூ. | ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதவிபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s. மித்தேஷ் கன்ட்ரக்ஷன், கும்பகோணம். | 8,03,086.58 | 8,01,804.13 | மதிப்பீட்டைவிட (–) 0.16% குறைவு |
| 2 | M/s. AB பில்டர்ஸ், | 8,03,086.58 | 8,03,086.58 | மதிப்பீட்டைவி |

**282**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அங்கீகரிக்கப்பட்டது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கும்பகோணம் | | | ட<br>(–) 0.28%<br>அதிகம் | |

அலுவலக குறிப்பு:

1. மதிப்பீட்டைவிட (–)0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள, M/s. மித்தேஷ் கன்ட்ரக்‌ஷன், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி 57ன் கீழ் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க. எண்.5129 /2025/E2

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.29**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பிடாரிக்குளம் அருகில் வணிக வளாகம் கட்டும் பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 08.02.2024 அன்று மெசர்ஸ். ஸ்ரீ ஜெயபாலாஜி பில்டர்ஸ் என்ற நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்திற்கான Structural design–யை அண்ணா பல்கலைக்கழகம் பட்டுக்கோட்டை மூலம் சுூராய்வு செய்து பரிசோதனை செய்து (Wetting) பெறப்பட்டதில் மதிப்பீட்டில் உள்ள சில இனங்களில் Pile Depth அதிகமானது, மற்றும் சில பணிகளின் இனங்களில் கம்பிகளை மாற்றம் செய்தும் கொடுக்கப்பட்டது. இதனை மேற்படி மதிப்பீட்டில் உள்ள பணிகளின் இனங்களில் மாற்றம் செய்துள்ளதற்கு தலைமைபொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி அனுப்பட்டதில் Roc.No.18484/2023/DO1 நாள்.4.11.2025 அன்று பணிதாள் (workslip) –க்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 1070.00 இலட்சத்திற்கு பதிலாக ரூ.1123.43 இலட்சமாக மாற்றி அனுமதிக்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் .<br><br>__அலுவலக குறிப்பு__<br>1. மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>2. மேற்கண்ட பணிக்கு அளித்துள்ள கூடுதலான தொகை ரூ. 53.45 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியில் செய்யலாம். மேற்கண்ட தொகையை ஏதாவது திட்டநிதி வரும்பட்சத்தில் ஈடுசெய்யலாம்.<br>**ந.க. எண் 2846/ 2023 / இ1** | **283**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| | **பொருள் எண்.30**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சாம்பவசிவம் பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கட்டும் பணிக்கு 19.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 08.02.2024 அன்று மெசர்ஸ். ஸ்ரீ ஜெயபாலாஜி பில்டர்ஸ் என்ற நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்திற்கான Structural design–யை அண்ணா பல்கலைக்கழகம் பட்டுக்கோட்டை மூலம் சுூராய்வு செய்து பரிசோதனை செய்து (Wetting) பெறப்பட்டதில் மதிப்பீட்டில் உள்ள சில இனங்களில் Pile Depth அதிகமானது, மற்றும் சில பணிகளின் இனங்களில் கம்பிகளை மாற்றம் செய்தும் கொடுக்கப்பட்டது. இதனை மேற்படி மதிப்பீட்டில் உள்ள பணிகளின் இனங்களில் மாற்றம் செய்துள்ளதற்கு தலைமைபொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி அனுப்பட்டதில் Roc.No.18484/2023/DO1 நாள்.14.11.2025 அன்று பணிதாள் (workslip) –க்கு | **284**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. 2269.00 இலட்சத்திற்கு பதிலாக ரூ.2350.07 இலட்சமாக மாற்றி அனுமதிக்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் .<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>2. மேற்கண்ட பணிக்கு அளித்துள்ள கூடுதலான தொகை ரூ. 81.07 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியில் செய்யலாம். மேற்கண்ட தொகையை ஏதாவது திட்டநிதி வரும்பட்சத்தில் ஈடுசெய்யலாம்.<br>**ந.க. எண் 5663/ 2025 / இ1** | |
| | **பொருள் எண்.31**<br>கும்பகோணம் மாநகராட்சி தேப்பெருமாள் நல்லூரில் கரிக்குளத்தில் அமைந்துள்ள குப்பை கிடங்கு மற்றும் தாராசுரத்தில் அமைந்துள்ள குப்பை கிடங்கு ஆகிய இரண்டு குப்பை கிடங்குகளிலும் தினந்தோறும் ஏராளமான குப்பை கொண்டுவரப் படுகின்றன. குப்பைகளை அவ்வப்போது பிரித்து அனுப்பப்படுகிறது. அதில் மீதம் உள்ள குப்பையானது சுமார் 69729 MT அளவு குப்பை உள்ளது. அவற்றினை அகற்றுவதற்கான (Bio Mining Of legacy Waste) குப்பை அகற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்( மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் கடிதமும் விரிவான திட்ட அறிக்கையானது வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் நிர்வாக ROC.No.74/2025/SBM-1 நாள்:19.11.2025 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் SBM 2.o திட்டத்தில் இருந்து 2.112 கோடி மற்றும் கும்பகோணம் மாநகராட்சியிலிருந்து 2.888 கோடி மொத்தம் 5.00 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து நிர்வாக அனுமதியானது பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் நிர்வாக ROC.No.74/2025/SBM-1 நாள்:19.11.2025 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை. மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**ந.க.எண்.** 12952 /2025/E4 | **285**<br>அலுவலக குறிப்பு ஏற்க்கப்ப ட்டது. |

மேயர்
கும்பகோணம் மாமன்றம்